கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.

*DEPOSITION OF WITNESS –Crl. Misc.39*

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Calandar Case .No. 112 /2017**

Deposition of witness for Petitioner: L.W 1 / P.W. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. முத்துக்குமரேசன் |
| கணவர்/ தந்தை பெயர் | : | ராமதாஸ் |
| தொழில் | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | தேனி |
| தாலுகா / மாவட்டம் | : | தேனி |
| வயது | : | 61/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07/08/2026

*( 1*வது எதிரி ஆஜரில்லை*. 2*வது எதிரி நீதிமன்ற காவலில் இருந்து முன்னிலைபடுத்தப்பட்டார்*. 1, 2* எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்*.* பிரிவு *355 BNSS*ன் படியான மனு அனுமதிக்கப்பட்டுள்ளது*.* சாட்சி காவல்துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்*.)*

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 10 வருடங்களுக்கு முன்பு நான் 23.08.2016 அன்று தேனியில் உள்ள காவல் துணைக்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது, நான் காலை 09.00 மணியளவில் வேலைக்கு சென்றுவிட்டேன். எனது மனைவியும் காலையில் போடியில் உள்ள பள்ளிக்கு வேலைக்கு சென்றுவிட்டார். நான் மதியம் 01.00 மணியளவில் எனது அலுவலகத்தில் இருந்தபோது எனது மனைவி எனக்கு போன் செய்தார். வீட்டிற்கு முன் நிறுத்தியிருந்த எங்களது TN60N0489 என்ற பதிவெண் கொண்ட அல்டோ காரை காணவில்லை என்றும், பூட்டி இருந்த வீடு திறந்து இருப்பதாகவும் எங்களது வீட்டிற்கு எதிர் வீட்டில் குடியிருக்கும் பழனியம்மாள் எனது மனைவியிடம் போன் செய்து தகவலை சொன்னதாக என்னிடம் கூறினார். நான் உடனே மேலதிகாரிகளிடம் அனுமதி வாங்கிக்கொண்டு எனது வீட்டிற்கு வந்தேன். நான் வீட்டிற்கு வந்து பார்த்தபோது எனது

வீட்டில் கிழக்கு பக்க வாசலில் இருந்த கேட்டின் பூட்டானது உடைக்கபடாமல் இருந்தது, வடக்கு பக்க வாசலில் இருந்த கேட்டின் பூட்டும் உடைக்கப்படாமல் இருந்தது. வீட்டின் முன்னால் இருந்த கிரில் கேட்டின் பூட்டானது உடைக்கப்பட்டு இருந்தது. வீட்டின் கதவில் உள்ள பூட்டு உடைக்கப்பட்டு, கதவு திறந்த நிலையில் இருந்தது. வீட்டினுள் 2 படுக்கையறைகள் உள்ளது. அதில் முதல் படுக்கை அறையில் இருந்த கதவு உடைக்கப்பட்டு இருந்தது. அந்த அறைக்குள் இருந்த பீரோவின் கதவுகளும், லாக்கரும் உடைக்கப்பட்டு இருந்தது. அந்த பீரோவில் இருந்த பணம் ரூ.4000/-, கோடாக் கேமரா மற்றும் வெளியில் நிறுத்தப்பட்டியிருந்த எனது காரின் உடைய ஸ்பேர் சாவியையும் காணவில்லை. 2வது படுக்கை அறையின் கதவும் உடைக்கப்பட்டு இருந்தது. அதன்பக்கத்தில் இருந்த சாமி அறையில் இருந்த பீரோவின் கதவுகளும், லாக்கரும் உடைக்கப்பட்டு இருந்தது. அதில் நாங்கள் வைத்திருந்த வெள்ளி சாமான்களான வெள்ளி காமாட்சி விளக்கு பெரியது – 2 , வெள்ளி காமாட்சி விளக்கு சிறியது – 2, வெள்ளி சாதா விளக்கு –2 , 2 ஜோடி விளக்குகள் – 2, குங்குமச்சிமில் –2 , சந்தனக்கும்பா – 1 , 1 ஜோடி வெள்ளிக்கொலுசு ஆகியவை காணவில்லை. தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. எனது மனைவி வீட்டிற்கு வந்துவிட்டார். நான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். **அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான், அந்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நீதிமன்றத்தில் மனு செய்து TN60N0489 என்ற பதிவெண் கொண்ட எனது அல்டோ காரை இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது மனைவி அரசு ஊழியர் என்றால் சரிதான். இவ்வழக்கில் திருட்டு போன கார் யார் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரில் உள்ளது. அந்த காரை வாங்குவதற்கு நான் என்னுடைய துறையில் அனுமதி பெற்றேனா என்றால் அனுமதி பெற்று துறையின் மூலம் கடன் பெற்று தான் மேற்படி காரை வாங்கினேன்.திருடு போன வெள்ளி பொருட்களுக்கு நான்தான் உரிமையாளர் என்பது தொடர்பான ரசீது முதலானஆவணங்கள் எதையும் நான் போலீசார் விசாரணையின் போது கொடுத்தேனா என்றால் இல்லை. எனது மனைவி எனக்கு தகவல் சொன்னதன் பேரில் நான் சம்பவ இடத்திற்கு வந்ததாக சொல்லியுள்ள

சங்கதிகளை பொறுத்து எனது மனைவி எந்த செல்போன் எண்ணில் இருந்து எனக்கு போன் செய்தார் என்று குறிப்பிட்டு நான் போலீசார் வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. எனது மனைவி சம்பவம் நடந்த இடத்தில் இருந்து எனக்கு போன் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு தடயவியல் ஆய்வகத்தில் இருந்து நிபுணர்கள் வந்தார்களா என்றால் வந்தார்கள். இவ்வழக்கில் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திலிருந்து உடைந்த பூட்டு மற்றும் மரச் சாமான்கள் ஆகியவற்றை போலீசார் எடுத்துச் சென்றார்களா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் இவ்வழக்கின் புகாரில் ரூ.4,000/– காணாமல் போனதாக சொல்லி உள்ள சங்கதிகளை பொறுத்து ரூ.4000/– வைத்திருந்ததற்கான ஆவணங்களை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. காணாமல் போனதாக சொல்லப்படும் கேமரா வாங்கியதற்கான ரசீதுகளை போலீசார் விசாரணையின் போது நான் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் நாளிலிருந்து எத்தனை நாட்கள் கழித்து காரினை நான் அடையாளம் காண்பித்தேன் என்றால் சுமார் ஒரு வார காலத்திற்குப் பிறகு கார் கிடைத்ததன் பேரில் நான் அடையாளம் காட்டினேன். எந்த இடத்தில் அடையாளம் காட்டினேன் என்றால் அல்லிநகரம் காவல் நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டினேன். போலீசார் என்னிடம் கார் திருச்சியில் கிடைத்ததாக சொன்னார்கள். இவ்வழக்கில் கேமரா மற்றும் வெள்ளி பொருட்கள் காணாமல் போனதற்கும் 1 மற்றும் 2ம் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு புனைபட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் யார் என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக கூறப்படும் சமயத்தில் எங்கள் வீட்டில் பணியாட்கள் இருந்தார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சம்பவத்திற்கு பிறகு என்னையும், எனது மனைவியும் எப்போது போலீசார் விசாரணைக்கு அழைத்தார்கள் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. இவ்வழக்கின் மகஜர் எப்போது தயார் செய்யப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது கார் திருச்சியில் இருந்து கிடைத்ததாக போலீசார் சொன்ன சங்கதிகளை பொறுத்து திருச்சியில் இருந்து போலீசார் யாரும் வந்து என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றாலும் நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் எனது வீட்டில் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

**இல்லை**

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.08.07 15:46:33 +0530